மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்,
சென்னை–05
பிறப்பிப்பவர்: திருமதி. எம். லக்ஷ்மி, இ.ஆ.ப.,

ந.க.எண். நிர்.2/007550/2023 நாள் : 30.04.2025

பொருள்: பணியமைப்பு – மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், சென்னை –5 – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகள் நலத் துறையில் பணிநியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் பணியில் சேர்ந்த நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை: 1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண். 1989/PSD-D2/2023, நாள் : 28.08.2023

2. இவ்வாணையரக இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை நாள்.29.09.2023
3. இவ்வாணையரக செ.மு.ந.க.எண்.003114/நிர்.2/2024, நாள்.07/08/2024
4. பணியாளர்களின் பணிசேர் கடிதங்கள்
5. முதன்மை கல்வி அலுவலர், கடலூர் மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண்.16317/ஆ5/2024, நாள்.02.01.2025
6. முதன்மை கல்வி அலுவலர், திருச்சிராப்பள்ளி, அவர்களின் கடித ந.க.எண்.7447/ஆ4/2024, நாள்.18.03.2025

.......................

**ஆணை :**

பார்வை 1 மற்றும் 2ல் கண்டுள்ளபடி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தொகுதி IV தேர்வில் இளநிலை உதவியாளர்களாக மாற்றுத்திறனாளிகள் நலத் துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 9 நபர்களுக்கு இளநிலை உதவியாளர் (ஊதிய நிலை–8, ரூ.19,500 –ரூ.71,900) பதவியில் பணிநியமன ஆணை வழங்கப்பட்டது.

2) பணிநியமனம் செய்யப்பட்ட மேற்படி 9 இளநிலை உதவியாளர்களில் திருமதி.க.கௌசல்யா என்பவருக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை 3ல் காணும் இவ்வாணையரக செயல்முறை ஆணையின்படி மேற்படி தனியர் இளநிலை உதவியாளர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

3) பார்வை 1ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதத்தின்படி தமிழ்வழி பயில் இட ஒதுக்கீட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ள வரிசை எண்.6 மற்றும் வரிசை எண்.7ல் உள்ள பணியாளர்கள் திருமதி.வி.வினோதினி, திருமதி.செ.ரேஷ்மா என்பவர்களின் தமிழ்வழி பள்ளிக் கல்வி சான்றிதழ்கள் உண்மைத் தன்மை வாய்ந்ததென பார்வை 5 மற்றும் 6ல் காணும் கடிதங்களின்படி சரிபார்க்கப்பட்டது.

4) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணிநிபந்தனைகள் சட்டம் 2016, விதி 28(1) ன்படி, கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ள பணியாளர்களை இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளில் பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the post included in Combined Civil Services Examination – IV (Group - IV)"

| வ.எண் | பணியாளர் பெயர் (திருவாளர்) மற்றும் தற்போது பணிபுரிந்து வரும் அலுவலகத்தின் விவரம் | இளநிலை உதவியாளர் பணி நியமனத்தில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | பா.சிவக்குமார்,<br>மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம்,<br>சென்னை –05 | 06.10.2023 மு.ப |
| 2 | மா.பசுபதி,<br>மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம்,<br>சென்னை –05 | 05.10.2023 மு.ப |
| 3 | நா.திவ்யா சரஸ்வதி,<br>பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை – 56. | 05.10.2023 மு.ப |
| 4 | த.பூமதி,<br>மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,<br>திருப்பூர் மாவட்டம் | 05.10.2023 மு.ப |
| 5 | சே.ரேஷ்மா,<br>மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம்,<br>சென்னை –05. | 05.10.2023 மு.ப |
| 6 | ராஜஸ்ரீ,<br>மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,<br>இராமநாதபுரம் மாவட்டம் | 05.10.2023 பி.ப |
| 7 | வி.வினோதினி,<br>மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,<br>விழுப்புரம் மாவட்டம் | 05.10.2023 மு.ப |
| 8 | ச.ஸ்ரீராம்,<br>அரசு மறுவாழ்வு இல்லம்,<br>புதுக்கோட்டை மாவட்டம். | 06.10.2023 மு.ப |

5) இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மேற்படி பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் மூன்றாண்டு தொடர்பணிக் காலத்திற்குள் ஈராண்டு தகுதிகாண் பருவம் நிறைவு செய்திட வேண்டும் எனவும், ஈராண்டு தகுதிகாண் பருவக் காலத்தில் கீழ்க்கண்ட துறைத் தேர்வு/பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

அ) அரசு அலுவலக நடைமுறை நூல் – 172
ஆ) பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சி

6) இது குறித்து தனியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(ஒம்/–) எம். லக்ஷ்மி
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்

// ஆணைப்படி //

30/4/2025

உதவி இயக்குநர் (நிர்வாகம்)

30-04-25

பெறுநர்

1. சம்பந்தப்பட்ட பணியாளர்கள்
(உரிய அலுவலர்கள் வழியாக)
2. செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
TNPSC சாலை,
சென்னை –03.

நகல்

1. உதவி இயக்குநர் (நிர்வாகம்),
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம்.
சென்னை –05.
2. மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்,
மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
அ) திருப்பூர் மாவட்டம்
ஆ) இராமநாதபுரம் மாவட்டம்
இ) விழுப்புரம் மாவட்டம்
3. நிர்வாக அலுவலர் (பொ),
அரசு மறுவாழ்வு இல்லம்,
புதுக்கோட்டை மாவட்டம்
4. முதல்வர்,
பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி,
பூவிருந்தவல்லி, சென்னை –56.
5. இ.கோ.